வாசிக்க: லூக்கா 23:1-17

***"நியாயமாய்த் தீர்ப்பு வழங்குபவரிடம் கிறிஸ்து தம்மை ஒப்படைத்தார்" (1 பேது 2:23)***

இயேசு தமது வார்த்தைகளில் பிழையற்றிருந்தார். அவரது நாட்களில் அவரே தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டிருப்பாரானால் இந்தச் சிலுவைக்கு நாம் தப்ப முடியுமா? தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுதலையும், அநியாயத்தையும் இயேசு எவ்விதம் சகித்தாரெனக் கவனிப்போம்.

*அ) "இறைவன் சிங்காசனத்தில்தான் இருக்கிறார்!"*

"நீங்கள் என்னைத் தவறாய்ப் புரிந்துகொள்ளலாம், ஆனால் விண்ணிலிருக்கும் என் தந்தைக்கு என் இருதயம் தெரியும். நீங்கள் என்னை இரக்கமின்றி நடத்தலாம், ஆனால் விண்ணிலிருக்கும் என் தந்தை எனக்கு நியாயம் செய்வார். நீங்கள் பிரதம மந்திரி அல்லது நாட்டுத் தலைவரது ஆசனத்தில் அமர்ந்திருக்கலாம், ஆனால் விண்ணக அரியணையிலிருப்பதோ எனது தந்தை." தம்மைத் தவறாய் மக்கள் புரிந்துகொண்டு இம்சைப்படுத்தியபோது இயேசுவின் மனதில் இவ்விதம்தான் பதில் எழுந்திருக்கும். பிலாத்துவோடு அவர் பேசியதைக் கவனியுங்கள்: "அப்பொழுது பிலாத்து: உன்னைச் சிலுவையில் அறையவும் அல்லது விடுதலை பண்ணவும் எனக்கு அதிகாரமுண்டென்று உனக்குத் தெரியாதா என்றான். இயேசு அதற்கு மறுமொழியாக: விண்ணிலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால் என்மேல் உமக்கு ஒரு அதிகாரமும் இராது என்றார்" (யோ 19:10,11).

*ஆ) "அமைதி பொன்னானது!"*

சொற்களைவிட அமைதியே வலிமையானதாயிருக்கும் நேரங்களுண்டு. என்ன பேசுவதென்று தெரியாததால் நாம் அமைதியாயிருப்பதல்ல; அது நமது மனவுறுதி மற்றும் நிச்சயத்தைச் சொல்லாமல் சொல்லுவது. பிரதான குரு இயேசுவைப் பார்த்து, "நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா?" என்று கேட்டபோது, இயேசுவோ பேசாமலிருந்தார் (மத் 26:62,63). பிலாத்து அவரைப் பார்த்து, "இவர்கள் உன்மேல் எத்தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே, நீ அவைகளைக் கேட்கவில்லையா?" என்றான். அவரோ "ஒரு வார்த்தையும்" மறுமொழியாய்ச் சொல்லவில்லை; அதனால் நாட்டின் அதிபதியாகிய அவன் மிகவும் ஆச்சரியப்பட்டான் (மத் 27:13,14).

*இ) "இறைவார்த்தை நிறைவேறவேண்டும்!"*

வெளிச்சத்தில் கடவுள் நம்மிடம் சொல்லியவைகளை இருட்டில் நாம் சந்தேகிக்கக்கூடாது. இளம் வயதிலிருந்தே இயேசு இறைநூலைக் கற்பதில் தீவிரமாயிருந்தார். தம்மைக் குறித்துத் திருவார்த்தைகளில் எழுதப்பட்டுள்ள யாவற்றையும் தூயாவியானவர் மூலம் அவர் புரிந்துகொண்டார். கடவுளின் வார்த்தைக்கேற்பவே தமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள நெடுகவே தெளிவாக முயன்றுவந்தார். பிரதான குருவின் வேலைக்காரனது காதைப் பேதுரு வெட்டிவிட்டபோது இயேசு பேதுருவிடம் சொன்னது: "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு 6000 பேர் படைகளுக்கும் அதிகமான வான்தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?—அப்படிச் செய்வேனானால், இவ்விதம் நடக்கவேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும்?" (மத் 26:52-56).